*2019 ஜனவரி 3]*

## (எ) "கஜா" புயலால் ஏற்பட்ட உயிரிழப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *16-11-2018 அன்று 'கஜா' புயல் நாகப்பட்டினம் மாவட்டம் அருகே கரையைக் கடந்தபோது டெல்டா மாவட்டங்கள் உட்பட 12 மாவட்டங்களில் மிகக் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டது குறித்தும், குறிப்பாக நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், மீனவர்கள் மற்றும் பொது மக்கள் பாதிக்கப்பட்டது குறித்தும் இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் காரணமாக உயிர்ச்சேதங்கள் பெருமளவில் தவிர்க்கப்பட்டன.*

*'கஜா' புயலால் பாதிப்படைந்த மாவட்டங்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள், மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டு, மீட்பு, நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. 'கஜா' புயல் காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் நிவாரண உதவி வழங்கவும், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரண உதவி வழங்கவும் உயிரிழந்த கால்நடைகளுக்கும், சேதமடைந்த பயிர்களுக்கும் உரிய நிவாரண உதவி வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.*

*மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'கஜா' புயலால் பாதிப்பிற்குள்ளான மாவட்டங்களுக்கு நேரில் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், ஆறுதலையும் தெரிவித்தார்கள்.*

*'கஜா' புயலின் தாக்கத்தால் உயிரிழந்தவர்களுக்கும், நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருந்தபோது உயிரிழந்த அரசுப் பணியாளர்களுக்கும் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.*

[பேரவைத் தலைவர்] [2019 ஜனவரி 3

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இம்மாமனிதர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், கஜா புயலின் தாக்கத்தினால் இன்னுயிரை இழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும், நிவாரணப் பணிகள் மேற்கொண்டபோது தங்கள் இன்னுயிரை இழந்த அரசுப் பணியாளர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)*

## (ஏ) சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் மற்றும் தமிழக முன்னாள் முதலமைச்சர் மற்றும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் கலைஞர் மு. கருணாநிதி ஆகியோர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் மற்றும் தமிழக முன்னாள் முதலமைச்சர் மற்றும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் கலைஞர் மு. கருணாநிதி ஆகியோர் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, மூன்று முறை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பெருமைமிகு இச்சட்டமன்றத்தில் மக்கள் பணியாற்றிய மூத்த உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் இயற்கை எய்திவிட்டார்கள்.

திரு. ஏ.கே. போஸ், தலைமைமீது மாறாத விசுவாசம் கொண்ட சிறந்த தொண்டர் ஆவார். மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்மீது அளவிலா பாசம் கொண்டவர். புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள்மீது மாறாத மதிப்பைக் கொண்டவர்.